# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (25.05.2022 முதல் 29.05.2022 )

**அறிக்கை எண் 041/2022** **தேதி.24.052022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (1905.2022 முதல் 23.05. 2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 29.05.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19/05 | 20/05 | 21/05 | 22/05 | 23/05 | தேதி | நாள் -1 25/05 | நாள்-2 26/05 | நாள்-3 27/05 | நாள்-4 28/05 | நாள்-5 29/05 |
| 2.9 | 0.1 | 1.2 | 0.2 | 0.0 | மழை (மி.மீ) | 5 | 10 | 20 | 10 | 6 |
| 29 | 27 | 32 | 33 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 33 | 33 | 33 |
| 21 | 23 | 23 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 23 | 23 | 23 | 23 |
| 8 | 6 | 5 | 6 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 95 | 65 | 76 | 80 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 74 | 76 | 66 | 78 | 71 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| 22 | 23 | 21 | 24 | 20 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| 200 | 230 | 230 | 200 | 200 | காற்றுவீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (25.052022 முதல் 29.052022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக

வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | மேற்கு மண்டல மாவட்டங்களில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண்ணின் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதுடன் பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் நீர் ஆவியாதல் தடுக்கப்படும்.<br>ஏதிர்பார்க்கப்படும் மழையினைச் சேமிக்கும் வகையில் சரிவுக்கு குறுக்காக மண்ணைப் புரட்டிப்போடும் கலப்பை கொண்டு கோடை உழவு செய்ய வேண்டும். |
| நெல் | விதைப்பு | குறுவை நெல் நாற்றாங்கால் தயாரிப்பதற்கு இது உகந்த தருணம் ஆகும். எனவே போதுமான தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் நாற்றாங்கால் தயாரித்து விதைப்பு செய்யலாம்.<br>லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் சமீபத்தில் விதைப்பு செய்த நாற்றாங்காலில் போதிய வடிகால் வசதி செய்யவும். |
| எள் | அறுவடை | அறுவடை செய்யப்படாத எள் பயிர் சாய்ந்து இருந்தால் காற்றோட்டம் ஏற்படுமாறு சாய்ந்த செடிகளை விலக்கி விடவும். நன்றாக வெய்யில் வந்தவுடன் அறுவடை செய்யவும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் 10 கிமீ வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| மஞ்சள் | நிலம் தயாரித்தல் | நிலவும் மழையயினைப் பயன்படுத்தி மஞ்சள் வடிகால் வசதியுடன் நடவுசெய்யவேண்டும்.<br>மஞ்சள் நடவு செய்வதற்கு உகந்த தருணமாகும். எனவே விவசாயிகள் மஞ்சளை நடவு செய்யலாம். மஞ்சள் நடவு செய்த மூன்று தினங்களுக்குள் களை முளைக்கும் களைக்கொல்லிகளை உபயோகப்படுத்தித களைகளை கட்டுப்படுத்தலாம். உதாரணமாக பெண்டிமெத்தலின் என்ற களைக்கொல்லியை ஒரு எக்டருக்கு 3.3 லிட்டர் என்றளவில் 500 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். |
| தென்னை | | மரங்களின் வேரில் மழை நீரை சேமிக்கும் வகையில் உள்நோக்கிய வட்டபாத்தியினை சீரமைக்கவும். |
| கால்நடைகள் | | இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாப்பாக கட்டி வைக்கவேண்டும்.<br>தீவனங்களை மழையில் நனையாமலும் ஈரத்தால் பாதிக்காமலும் பாதுகாக்க வேண்டும்.<br>மழையுடன் மணிக்கு 10-15 கி.மீ வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைக்குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும். |

### குறுஞ்செய்தி

- மழையுடன் மணிக்கு 10-15 கி.மீ வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைக்குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.

முதன்மைஅலுவலர் (GKMS)
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை